மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு நாள் பொறுக்கலாம். நாளை என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். இன்று போய் நாளை வரட்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினமும் இதேபோன்று நம்முடைய அலுவல் நேரங்களைக் குறைத்து, தினமும் மதியம் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் 3, 4 மணிக்கு சாப்பிடுகின்ற நிலை இருக்கிறது. எனவே உறுப்பினர்களுடைய நிலையைப் புரிந்து, நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி பேசி தீர்க்கின்ற வகையிலே, நாளைய தினம் இதற்கு முடிவு கட்டலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்காக நடந்து கொண்டால் பிரச்சினை இல்லை. நாளைய தினம் முடிவே கட்டுவதில்லை. இன்று போய் நாளை வரட்டும் என்றுதான் சொன்னார். நடவடிக்கைக்கு உட்பட்ட உறுப்பினர்கள் தவிர மற்றவர்கள் நாளைக்கு வரலாம், தாராளமாகக் கலந்துகொள்ளலாம், பேசலாம். நாளை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற விருப்பம் யாருக்கும் இல்லை.

திரு. கே. கே. சின்னப்பன்: இதே நிலைமை இருக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிலைமை இருக்கக்கூடாதென்றால் உங்களுடைய நண்பர்களுக்கு—வெளியிலே போயிருக்கிறார்கள்—அவர்களிடம் போய் சொல்லுங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

4. விதி 110-ன் கீழ் அறிக்கை

எல்.டி.டி.ஈ.-ஐப் பற்றி திரு. சுப்பிரமணியன் சுவாமி குறிப்பிடும்போது தெரிவித்த சொல் குறித்து காவல்துறையினர் தொடர்ந்துள்ள வழக்கில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்ற அரசு முடிவு குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிவிப்பினை இப்போது வெளியிடுவார்கள்.

முற்பகல் 11.30

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் சில நாட்களுக்கு முன்பு, இந்தச் சட்டமன்றப் பேரவையில் உரையாற்றும்போது, சுப்பிரமணியன் சுவாமி, மதுரையில் நடத்திய பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் உபயோகப்படுத்திய ஒரு சொல் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் மனங்களை மிகவும் புண்படுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டி, சுப்பிரமணியன் சுவாமிமீது சட்டப்படியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர் என்கின்ற முறையிலும் தனிப்பட்ட முறையிலும் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் மீது அபரிமிதமான அன்பையும் மதிப்பையும் வைத்துள்ள நான் (மேசையைத் தட்டும் ஒலி) நடைமுறையில் உள்ள சட்டத்தின்கீழ் சுப்பிரமணியன் சுவாமிமீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவித்தேன். அதன்படி திரு. செ. கு. தமிழரசன் அவர்கள் கொடுத்த புகாரின்மீது காவல்துறையினர் வழக்கு ஒன்றைப் பதிவு செய்தனர்.

எத்தகைய ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் மனங்கள் புண்படுமோ, எத்தகைய ஒரு சொல் தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளதோ அந்த இழிச்சொல்லைப் பயன்படுத்தி, அதன்மூலம் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் மனங்களை சுப்பிரமணியன் சுவாமி புண்படுத்தி இருந்ததால், 1989 ஆம் வருடத்திய அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினர் மீதான கொடுஞ்செயல்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ், அவர் மீது தமிழகக் காவல் துறை வழக்கு ஒன்றைப் பதிவு செய்தது. மேலும் இந்த வழக்கில் சட்டப்படியான மேல் நடவடிக்கை எடுப்பதற்கும், தமிழகக் காவல் துறை எண்ணியிருக்கிறது.

இதற்கிடையில், தான் செய்த தவறுகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, சுப்பிரமணியன் சுவாமி உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, தன்னைக் கைது செய்வதைத் தடுக்க ஒரு ஆணையைப் பெற்றுள்ளார். இது தொடர்பாக 23-4-1995 காலையிலும், 24-4-1995 அன்று காலையிலும் நான் வெளியிட்ட அறிக்கைகளை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 23-4-1995 அன்று வெளியிட்ட எனது அறிக்கையில், உச்சநீதிமன்றம் வழங்கிய தடையாணையைப் பற்றிக்

குறிப்பிட்டபோது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் உணர்வுகளை யாரும் புண்படுத்திவிடக்கூடாது என்கின்ற நோக்கத்துடன்தான் கருத்துக்களைத் தெரிவித்திருந்தேன். அவை, ஆதிதிராவிட மக்களின் உரிமைகளைக் காக்கின்ற சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழக அரசு கொண்டுள்ள ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் வெளிப்படுத்துவதற்காகக் கூறப்பட்ட கருத்துக்களே தவிர, நீதிமன்றத்தின் தடையாணையை விமரிசிப்பதற்கோ அல்லது அவமதிப்பதற்கோ கூறப்பட்டக் கருத்துக்கள் அல்ல. அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினர்மீதான கொடுஞ்செயல்கள் தடுப்புச் சட்டம் பிரிவு 18-ன்படி இந்தச் சட்டத்தின்கீழ் குற்றம் புரிந்தவர்களுக்கு, குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 438-ன்கீழ் அனுமதிக்கப்படுகின்ற முன் ஜாமீன் கிடைப்பதற்கு வழி இல்லை என்ற கருத்தினைச் சுட்டிக் காட்டியிருந்தேன். மேலும் உச்ச நீதிமன்றம் வழங்கிய தடையாணைக்குத் தகுந்த மாற்றங்களைப் பெறுவதற்காக ஒரு மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்படும் என்று மட்டுமே தெரிவித்திருந்தேனே தவிர, உச்ச நீதிமன்றத்தை விமர்சிக்கின்ற எண்ணமோ, அவமதிக்கும் எண்ணமோ, அதன் ஆணைக்கு எதிராகச் செயல்படுகின்ற எண்ணமோ, எனக்கோ தமிழக அரசுக்கோ கிடையாது என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாறாக, நீதித்துறை மீதும், உச்ச நீதிமன்றத்திலிருந்து ஆரம்பித்து எல்லா நீதிமன்றங்களின் மீதும், எனக்கும் தமிழக அரசுக்கும் மிகுந்த மரியாதையும் நன் மதிப்பும் உண்டு என்பதை இந்த இடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுப்பிரமணியன் சுவாமி, ஆரம்பத்தில், தான் உபயோகப்படுத்திய இழிச்சொல்லைப் பல வகையிலும் நியாயப்படுத்த முயன்றாலும், இறுதியில் தன் செயலுக்காக மனம் வருந்தி பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுள்ளார். அந்தச் செய்தி பல நாளிதழ்களில் வெளிவந்துள்ளது. சுப்பிரமணியன் சுவாமி, தான் பேசிய பேச்சினால், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் மனம் புண்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டுள்ள சூழ்நிலையில் ஏற்கெனவே அவர் மீது காவல் துறையினர் தொடர்ந்துள்ள வழக்கில், மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. சுப்பிரமணியன் சுவாமிமீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அவையில் ஏற்கெனவே நான் குறிப்பிட்டிருந்த காரணத்தினால், அது தொடர்பான இந்த விபரங்களை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.